


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.09.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்வில், அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ஈக்வினிக்ஸ் (Equinix) நிறுவனம், சிப்காட் சிறுசேரி தொழில் நுட்பப் பூங்காவில் 574 கோடி ரூபாய் முதலீட்டில் அமைத்துள்ள தரவு மையத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், வழிகாட்டி நிறுவனத்தின் செயல் இயக்குநர் மருத்துவர் பு. அலர்மேல்மங்கை, ஈக்வினிக்ஸ் இந்தியா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மனோஜ் பால், துணைத் தலைவர் பால் வாக்கர் மற்றும் அந்நிறுவனத்தின் உயர் அலுவலர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.09.2025) சென்னை, தியாகராயர் நகரில், 133வது வார்டு, சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" முகாமிற்கு நேரில் சென்று ஆய்வு செய்தபோது, பிறப்புச் சான்றிதழ் வேண்டி விண்ணப்பித்த பயனாளி ஒருவருக்கு உடனடியாக பிறப்புச் சான்றிதழ் வழங்கினார். இந்நிகழ்வின்போது, சட்டமன்ற உறுப்பினர் ஜெ. கருணாநிதி, முதல்வரின் முகவரித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் / சிறப்பு அலுவலர் திருமதி பெ. அமுதா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், மாமன்ற உறுப்பினர் கே.ஏழுமலை, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.9.2025) தலைமைச் செயலகத்தில், போர்ச்சுக்கலில் நடைபெற உள்ள சர்வதேச போட்டியில் பங்குபெறும் ஃபிளையிங் டிஸ்க் அணிக்கு 6 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி உள்பட விளையாட்டு வீரர், வீராங்கனைகள், அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து விளையாட்டு வீரர் – வீராங்கனைகள்

# விளையாட்டு உபகரணங்கள் வாங்க - பயிற்சி பெற ரூ.23,21,140 லட்சத்திற்கான காசோலைகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, செப்.21-**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்காகவும், பயிற்சி பெறுவதற்காகவும் 23,21,140 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.**

முதலமைச்சர் அவர்கள் இந்தியாவின் விளையாட்டு தலைநகராக தமிழ்நாட்டினை உருவாக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். அதனடிப்படையில் விளையாட்டு வீரர்களுக்கு உதவுவதற்காக தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளையை துவக்கி அந்த நிதியில் இருந்து விளையாட்டு உபகரணங்கள் வாங்க நிதியுதவி வழங்கப்படுவதுடன், வெளிநாடுகளில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்கவும், விளையாட்டு வீரர்கள் சர்வதேச, தேசிய அளவிலான போட்டிகளில் பங்குபெறும் வகையில் சிறப்பு பயிற்சிகள் மேற்கொள்ளவும் நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.9.2025) தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளை நிதியிலிருந்து பதக்கங்கள் வென்ற பாரா தடகள வீராங்கனைகள் முத்துமீனா வெள்ளைசாமி, நா. சங்கர் சத்யா, பாரா தடகள வீரர் க. கஜன் கெளதம் ஆகியோர் ஆஸ்திரேலியா நாட்டின் பிரிஸ்பேன் நகரில் அக்டோபர் 8 முதல் 15 வரை நடைபெற உள்ள 2025 தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்து கொள்வதற்காக தலா 2,61,800 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.

மேலும் பாரா பேட்மிண்டன் வீரர் தினகரன் பாண்டுரங்கன் நடைபெற உள்ள உலக சாம்பியன்ஷிப் மற்றும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக பயிற்சி மேற்கொள்ள 75 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையையும், தங்கப் பதக்கம் வென்ற நீச்சல் வீராங்கனை பிரமிதி ஞானசேகரன் பக்ரைன் நாட்டில் நடைபெறும் 2025 ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் பங்கேற்கவும், விளையாட்டு உபகரணங்கள் வங்குவதற்காகவும் 1.25 லட்சம் ரூபாய்க்கான காசோலையையும், தேசிய சீனியர் தடகள சேம்பியன்ஷிப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற தடகள வீராங்கனை கி. கோபிகா விளையாட்டு உபகரணங்கள் வங்குவதற்காக 1 லட்சம் ரூபாய்க்கான காசோலையையும் மற்றும் வில்வித்தை வீராங்கனை கே. எஸ். வெனிசா ஸ்ரீ விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்கு 4,10,740 ரூபாய்க்கான காசோலையையும் வழங்கினார்.

போர்ச்சுக்கலில் நடைபெறும் சர்வதேச போட்டியில் பங்குபெறும் ஃபிளையிங் டிஸ்க் அணிக்கு 6 லட்சம் ரூபாய்க்கான காசோலையையும், 75ஆவது தேசிய ஜீனியர் கூடைப்பந்து சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் விளையாட்டு விடுதி கூடைப்பந்து வீரர், வீராங்கனைகள் ர.ர. அஸ்வீன், ஐ. ஆகாஷ், பா.சு. ராஜலெட்சுமி, பெ.குருதீபா, பா.ஸ்ரீராஜலெட்சுமி ஆகியோருக்கு விளையாட்டு உபகரணங்களுக்காக தலா 30 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளையும், இரக்பி வீராங்கனை ந.சு.அக்ஷயாவிற்கு உபகரணங்கள் வாங்குவதற்காக 75 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையையும் வழங்கினார்.

டைவிங் போட்டியில் சாதனை படைத்த வீராங்கனை சா.அர்ச்சனா, உலக அளவில் இந்தியா மற்றும் தமிழ்நாட்டை பிரதிநிதித்துவப்படுத்திய, உலகிலேயே ஆர்க்டிக் மிஷன் முடித்த இளம் வயது விண்வெளி வீராங்கனை செல்வி இனியா பிரகதி ஆகியோர் துணை முதலமைச்சர் அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றார்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி உள்பட விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.09.2025) தலைமைச் செயலகத்தில், ஈக்வினிக்ஸ் இந்தியா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மனோஜ் பால் சந்தித்து, ஈக்வினிக்ஸ் நிறுவனத்தின் சமூகப் பொறுப்பு நிதியிலிருந்து (CSR Fund) முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 9 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், வழிகாட்டி நிறுவனத்தின் செயல் இயக்குநர் மருத்துவர் பு.அலர்மேல்மங்கை, ஈக்வினிக்ஸ் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.9.2025) தலைமைச் செயலகத்தில், உலகிலேயே ஆர்க்டிக் மிஷன் முடித்த இளம் வயது விண்வெளி வீராங்கனை செல்வி இனியா பிரகதி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, உள்பட விளையாட்டு வீரர், வீராங்கனைகள், அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## சிப்காட் – சிறுசேரி தகவல் தொழில் நுட்பப் பூங்காவில்

# ரூ.574 கோடி முதலீட்டில் 'ஈக்வினிக்ஸ்' நிறுவனத்தின் தகவல் தரவு மையம்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, செப்.21-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.09.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்வில், அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ஈக்வினிக்ஸ் (Equinix) நிறுவனம், சிப்காட் - சிறுசேரி தொழில் நுட்பப் பூங்காவில் 574 கோடி ரூபாய் முதலீட்டில் அமைத்துள்ள தரவு மையத்தை திறந்து வைத்தார்.**

தமிழ்நாட்டில் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை

1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு உயர்த்துவதற்கும் தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்கு தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

மேலும், உயர் தொழில் நுட்ப திட்டங்களை ஈர்த்து அதன் மூலம் உயர் ஊதிய வேலைவாய்ப்புகளை பெருமளவில் உருவாக்கிடவும், தமிழ்நாடு அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

தகவல் தரவு மையத்தின் முக்கிய நகரமாக சென்னை பெரும் வளர்ச்சி பெற்று வரும் நிலையில், பல்வேறு நிறுவனங்களின் புதிய தரவு மையங்கள் அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

### ஈக்வினிக்ஸ் நிறுவனம்

அமெரிக்காவைத் தலைமையகமாகக் கொண்ட ஈக்வினிக்ஸ் நிறுவனம், உலகளாவிய வணிகங்களுக்கான சர்வதேச இணைப்பு தீர்வுகள் அளித்திடும் முன்னணி டிஜிட்டல் உள்கட்டமைப்பு நிறுவனங்களில் ஒன்றாகும். உலக அளவில், பல்வேறு நாடுகளில், தரவு மையங்களை இந்நிறுவனம் நிறுவி செயல்படுத்தி வருகிறது.

செயற்கை நுண்ணறிவு மற்றும் புதிய தலைமுறை தொழில்நுட்பங்களுக்கு உகந்த உள்கட்டமைப்பை வழங்கும் நோக்கில், ஈக்வினிக்ஸ் நிறுவனம், சிப்காட் சிறுசேரியில், ஒரு நவீன தகவல் தரவு மையத்தை உருவாக்கியுள்ளது.

கடந்த 2022-ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது, முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், இத்தரவுத் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. அன்றைய தினமே, முதலமைச்சர் அவர்களால், இத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அதன் தொடர்ச்சியாக, செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள சிப்காட் சிறுசேரி தொழில் நுட்பப் பூங்காவில் ஈக்வினிக்ஸ் நிறுவனம் 574 கோடி ரூபாய் முதலீட்டில் அமைத்துள்ள தகவல் தரவு மையத்தினை முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகா னந்தம், தொழில், முதலீட்டு ஊக்குப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், வழிகாட்டி நிறுவனத்தின் செயல் இயக்குநர் மருத்துவர் பு.அலர்மேல்மங்கை, ஈக்வினிக்ஸ் இந்தியா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் தி மனோஜ் பால், துணைத் தலைவர்

பால் வாக்கர் மற்றும் அந்நிறுவனத்தின் உயர் அலுவலர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## அன்னியூர் சிவா எம்.எல்.ஏ. விடுத்த கோரிக்கையேற்று – அன்னியூரில் உள்ள அரசு கல்லூரி

# 'முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அரசு கலைக் கல்லூரி, அன்னியூர்' எனப் பெயர் மாற்றம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, செப்.21-**

**உயர்கல்வி - கல்லூரிக் கல்வி 2025 - 26 ஆம் கல்வியாண்டில் துவங்கப்பட்ட "அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி", அன்னியூர், விழுப்புரம் மாவட்டம் என்ற பெயரினை "முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அரசு கலைக் கல்லூரி, அன்னியூர்" என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி திருத்தம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.**

இதுதொடர்பான அரசு ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி பகுதியில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியினை துவங்க அனுமதித்து ஆணையிடப்பட்டது.

மேற்கண்ட கல்லூரிக்கான கட்டடம் கட்ட அன்னியூரில் நிலம் தெரிவு செய்யப்பட்ட நிலையில், அக்கல்லூரியின் பெயரை "அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அன்னியூர்" எனத் திருத்தம் செய்து ஆணையிடப்பட்டது.

இந்நிலையில், விக்கிரவாண்டி தொகுதி, சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா 9.9.2025 நாளிட்ட மனுவில் மேற்கூறிய கல்லூரியின் பெயரினை "முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அரசு கலைக் கல்லூரி, அன்னியூர்" என மாற்றம் செய்து ஆணையிடுமாறு கோரியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கையினை ஏற்று பின் வருமாறு திருத்தம் வெளியிடப்படுகிறது.

### திருத்தம்

அரசாணை (நிலை) எண். 137, உயர்கல்வி (ஜி1)த் துறை, நாள் 27.6.2025-ல் குறிப்பிடப்பட்டுள்ள "அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அன்னியூர், விழுப்புரம் மாவட்டம்" என்ற பெயரினை "முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அரசு கலைக் கல்லூரி, அன்னியூர்," விழுப்புரம் மாவட்டம் என படிக்கப்படுதல் வேண்டும்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் பொ.சங்கர், பிறப்பித்துள்ள அரசாணையில் குறிப்பிட்டார்.